**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே.: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: BaughmanBJ@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம். 20191216

**இலங்கை முழுவதிலும் இருந்தான ஆங்கில ஆசிரியர்களின் திறன்களை அமெரிக்கா கட்டியெழுப்புகிறது**

**கொழும்பு, டிசம்பர் 16, 2019:** டிசம்பர் 7, 8ஆம் திகதிகளில் அமெரிக்கத் தூதரகம் இலங்கை முழுவதிலும் இருந்தான 40 ஆசிரியர்களுக்கு இரு நாட்கள் கொண்ட 'அக்சஸ்' ஆசிரியர் பயிற்சியை (Access Teacher Training) கொழும்பில் நடத்தியது. அமெரிக்கத் தூதரகம் நிதியுதவியளித்துள்ள நுண்-புலமைப்பரிசில் திட்டமான அக்சஸ், மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தலைமைத்துவ திறன்களை இரு வருடங்களுக்கு கற்பிக்கிறது. விமர்சன ரீதியான சிந்தனை, தலைமைத்துவத் திறன், சமூக சேவை, தனிப்பட்ட அபிவிருத்தி, மற்றும் அமெரிக்க கலாசாரம் மற்றும் விழுமியங்கள் உள்ளடங்கலான பயிற்சிகளை அமெரிக்காவைச் சேர்ந்த ஆங்கில மொழி வல்லுநர்கள் நடத்தினர். மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதன் மூலம் அக்சஸ் ஆசிரியர்கள் மாணவர்களை கல்வி மற்றும் தொழில் ரீதியான எதிர்கால வாய்ப்புகளுக்கு தயார்படுத்துகின்றனர்.

"அதிகரித்துவரும் ஒன்றோடொன்று இணைந்த உலக சந்தையில் பங்கெடுப்பதற்குத் தேவையான கருவிகளை மாணவர்களுக்கு வழங்குவதானது, நன்கு ஊதியம் வழங்கப்படும், திறன்சார் தொழிலை பெற்றுக்கொள்வதில் அவர்களுக்கு உதவும் என்பதுடன், போட்டித்தன்மை மிக்க தொழிலாளர் படையொன்றை கட்டியெழுப்ப இலங்கைக்கும் உதவியாக அமையும்," என்று அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்தார். "முன்னால் இருக்கும் சவால்களை எதிர்கொள்ளவதற்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் இலங்கையின் அடுத்த தலைமுறைத் தலைவர்களை சிறப்பாக தயார்படுத்த இந்தப் பயிற்சி ஆசிரியர்களுக்கு உதவுகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

2004 ஆம் ஆண்டு இலங்கையில் தொடங்கப்பட்ட அக்சஸ் திட்டமானது, திறமையான, பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு, குறிப்பாக 13 தொடக்கம் 20 வயதுடையவர்களுக்கு, ஆங்கில மொழித் திறன்களுக்கான அடிப்படையை வழங்குகிறது. அக்சஸ் திட்டத்தை பூர்த்தி செய்யும் பங்கேற்பாளர்கள் பரந்தளவிலான தொழில் மற்றும் கல்வி வாய்ப்புகளை பின்தொடர்ந்து செல்லக்கூடிய வகையிலான ஆங்கில மொழித் திறன்களை அக்சஸ் திட்டங்கள் வளர்க்கின்றன. அமெரிக்காவில் எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கற்கைநெறிகளுக்கு போட்டியிடுவதற்கான மற்றும் பங்குகொள்வதற்கான திறன்களையும் பங்கேற்பாளர்கள் பெற்றுக்கொள்கின்றனர். இலங்கை முழுவதிலும் பத்து அக்சஸ் நிலையங்கள் காணப்படுகின்றன. அக்சஸ் ஆசிரியர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.